# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:49** **தேதி:-07.07.2015**

**ப்ராட் பேண்ட் சேவையை தனியாருக்கு தராதே!!!!**

அன்பார்ந்த தோழர்களே,

BSNLன் ப்ராட்பேண்ட் சேவைகளை வழங்குவதையும், பராமரிப்பதையும் தனியாருக்கு வழங்க நிர்வாகம் முடிவு எடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தற்போது இந்த சேவைகளை செய்துவரும் ஊழியர்களின் மீது ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். நிர்வாகம் ஒருபுறம் ஊழியர்கள் உபரியாக இருப்பதாக கூறுகிறது, மறு புறம் ஊழியர்கள் செய்து வரும் பணிகளை தனியாருக்கு கொடுக்கிறது. நிர்வாகத்தின் இந்த முடிவு சேவைகளை மேம்படுத்துவது என்பதற்கு பதிலாக இதர சில காரணங்களுக்காகவே எடுக்கப்பட்டு உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட இந்த முடிவு நிர்வாகத்தின் மூர்க்கத்தனத்தை காட்டும் செயலாகும். இந்த முடிவின் காரணமாக ஆயிரக்கணக்கான TTA மற்றும் TMகள் உபரியாவார்கள். நிர்வாகத்தின் இந்த மூர்க்கத்தனமான முடிவை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நமது மத்திய சங்கம் இது தொடர்பாக நிர்வாகத்தை கண்டித்து ஒரு கடிதம் கொடுத்துள்ளது. மேலும் ஒரு ஒன்று பட்ட போராட்டம் நடத்துவதற்கு இதர சங்கங்களோடு நமது மத்திய சங்கம் தொடர்பு கொண்டு வருகிறது. நிர்வாகம் உடனடியாக இது தொடர்பாக ஊழியர் சங்கங்களோடு விவாதிக்கவில்லை எனில் ஒரு கடுமையான போராட்டத்திற்கு நாம் தயாராக வேண்டும் என நமது மத்திய சங்கம் அறைகூவல் விட்டுள்ளது. நமது மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு கொடுத்துள்ள கடிதத்தின் தமிழாக்கத்தை கீழே கொடுத்துள்ளோம்.

"ப்ராட் பேண்ட் சேவைகளை வழங்குவதையும், பராமரிப்பதையும் தனியாருக்கு வழங்குவது என்று நிர்வாகக் குழு எடுத்துள்ள முடிவிற்கு எங்களின் கடுமையான எதிர்ப்பை முதலில் பதிவு செய்ய விரும்புகிறோம். கம்பியுடன் கூடிய ப்ராட் பேண்ட் சேவையில் BSNL 60 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட சந்தை பங்கீட்டை கொண்டுள்ளது. தற்போது இந்த ப்ராட் பேண்ட் சேவைகளை வழங்குவதையும், பராமரிப்பதையும் தற்போது கணிசமான ஊழியர்கள் செய்து வருகின்றனர். இந்த பணிகளை செய்ய ஆயிரக்கணக்கான TM, TTA மற்றும் JTOக்களை BSNL நிறுவனம் கொண்டுள்ள போது இதனை தனியாருக்கு வழங்குவது என்பது ஒரு மோசமான வீண் செலவு. மேலும் நிறுவனம் பொருளாதார ரீதியாக தடுமாறிக்கொண்டுள்ள போது இது மேலும் சிரமத்தை ஏற்படுத்தும். தேவையான கருவிகளை கொடுத்து மேலும் ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகளை கொடுப்பதன் மூலம் நிச்சயமாக நம்மால் ப்ராட் பேண்ட் சேவைகளின் தரத்தை உயர்த்த முடியும். உண்மையில்

சொல்லப்போனால், சங்கங்களும், FORUMமும் இவற்றை செய்ய வேண்டும் என நிர்வாகத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளன. நிர்வாகத்தின் இந்த ப்ராட் பேண்ட் சேவைகளை வழ்ங்குவது மற்றும் பராமரிப்பதை தனியாருக்கு வழங்குவது என்ற முடிவு சேவைகளை மேம்படுத்துவது என்பதனை தவிர்த்து வேறு ஏதோ "தனியான காரணங்கள்" உள்ளதாக தெரிகிறது. இந்த முடிவானது ஊழியர்கள் மீது ஒரு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் மிக முக்கியமானது. எனவே அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு கலந்தாலோசித்து தான் நிர்வாகம் ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும். ஆனால் இது நடைபெற வில்லை. இது நிர்வாகம் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களை வைத்திருப்பது என்கிற நடைமுறையை கேலிக்குறியதாக ஆக்குவதாகும். எனவே ப்ராட் பேண்ட் சேவைகளை தனியாருக்கு வழங்குவது என்கின்ற முடிவை நிறுத்தி வைத்து அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு கலந்தாலோசிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இதையும் மீறி சங்கங்களோடு கலந்தாலோசிப்பதற்கு முன்பு இதனை அமுல் படுத்த நிர்வாகம் நினைக்கும் பட்சத்தில் நாங்கள் போராட்டத்தில் இறங்குவதை தவிர வேறு வழியில்லை."

அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் இந்த நியாயமான கோரிக்கையை நிர்வாகம் ஏற்றுக் கொண்டு பேச்சு வார்த்தையை நடத்தும் என நம்புகிறோம். இல்லையெனில் நமது பணியை பாதுகாக்க, நமது நிறுவனத்தை பாதுகாக்க மீண்டும் போராடுவதை தவிர வேறு வழியில்லை. எனவே போர்க்களத்திற்கு தயாராவோம். ஒன்று படுவோம். போராடுவோம். நிர்வாகத்தின் முடிவை மாற்றும் வரை போராடிடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**